13

# கிறிஸ்தவம் மேன்மையானது!

## (7:1-28)

"மேன்மையானது" என்ற வார்த்தை எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் திறவுகோல் வார்த்தையாக உள்ளது என்று நாம் பலமுறை குறிப்பிட்டுள்ளோம். யூதக்கிறிஸ்தவர்கள், ஒரு பிரதான ஆசாரியரையோ, ஒரு தேவாலயத்தையோ அல்லது பலிகளையோ கொண்டிராதபடியால், யூதத்துவத்தைக் காட்டிலும் அவர்களின் மார்க்கம் தாழ்ந்ததாக இருந்தது என்று அவர்களுக்குக் கூறப்பட்டிருக்கலாம். இதற்கு, "கிறிஸ்தவராயிருப்பதற்கு நீங்கள் எதையும் விட்டுக்கொடுத்துவிடத் தேவையில்லை. நீங்கள், *மேன்மையான* ஒரு ஆசாரியரை, *மேன்மையான* ஒரு தேவாலயத்தை மற்றும் *மேன்மையான* பலிகளைக் கொண்டிருக்கிறீர்கள். கிறிஸ்தவத்தில் எல்லாமே *மேன்மையானவையாக* உள்ளன!" என்பதே செயல்விளைவில் எழுத்தாளரின் பதிலாக இருந்தது.

முந்திய பாடத்தில் நாம், எபிரெயர் 7ம் அதிகாரம் பற்றிய படிப்பு ஒன்றைத் தொடங்கினோம். இந்த நிருபத்தின் முதன்மைச் செய்தி, 7ம் அதிகாரத்தில் கலந்துரையாடப் பட்டுள்ளது: இயேசு ஒரு மேன்மை யான ஆசாரியத்துவத்தைக் கொண்டுள்ளார். அவர், "மெல்கிசேதேக்கின் முறைமைப்படி பிரதான ஆசாரியராக" இருக்கும் காரணத்தால், இது உண்மை யானதாக உள்ளது (6:20). "மெல்கிசேதேக்கின் முறைமைப்படி" ஆசாரியராக இருத்தல் என்பது, எதை அர்த்தப்படுத்துகிறது என்பதைப் பற்றி, நாம் ஏற்கனவே கலந்துரையாடியுள்ளோம், ஆனால் 7ம் அதிகாரத்தில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டியவை இன்னும் அதிகமாக உள்ளன. இந்த அதிகாரத்தின் கடைசிப் பகுதி, இந்த நிருபத்தின் பிற்பகுதியில் உள்ள ஆய்வுக்கருத்துகளில் சிலவற்றை முன்னெதிர் நோக்குகிறது மற்றும் இப்பகுதி பல முடிவுகளைத் தரவழைக்கிறது. இந்தப் பாடத்தில் நாம், 7ம் அதிகாரத்தைத் திரும்பவும் கண்ணோக்கி, அதில் இன்றைய நாட்களில் நமக்குள்ள மற்ற பாடங்கள் யாவை என்று காண்போம்.

### *மேன்மையான ஆசாரியரான இயேசு*

மேலே உரைக்கப்பட்டபடி, லேவியத்துவ ஆசாரியத்துவத்தைக் காட்டிலும் இயேசுவின் ஆசாரியத்துவம் மேன்மையானது என்பதே, 7ம் அதிகாரத்தின் திறவுகோல் சத்தியமாக உள்ளது. இயேசு லேவி கோத்திரத்திலிருந்து வரவில்லை என்பதால் அவர் ஒரு பிரதான ஆசாரியராக இருக்க இயலாது என்று யூதர்கள் விவாதித்து இருக்கலாம் (காண்க வசனம் 14), ஆனால், இயேசு வேறொரு கோத்திரத்தில் இருந்து வந்தார் என்பது, நமது பிரதான ஆசாரியர் என்ற வகையில் அவர் தமது பணிப்பொறுப்பை நிறைவேற்றுவதில் இருந்து அவரைத் தகுதியிழக்கச் செய்யவில்லை என்று எழுத்தாளர் காண்பித்தார். இயேசு தனித்தன்மை வாய்ந்தவராகவும் பூரணப்பட்டவராகவும் இருந்ததால், உண்மையில் அவர் ஒரு மேன்மையான ஆசாரியராக இருந்தார் என்று எழுத்தாளர் வலியுறுத்தினார்

*(வசனம் 28); அவர் ஒரு இராஜாவாக இருக்கிறார், மற்றும் அவர் மாறாதவராக இருக்கிறார். நம்மை மீட்பதற்காக அவர் என்றென்றைக்கும் உயிருள்ளவராக இருக்கிறார் (வசனம் 25).*

## கிறிஸ்தவத்தில் உள்ள ஒவ்வொரு விஷயமும் *மேன்மையானது*

**இது *அன்று* அர்த்தப்படுத்தியது என்ன**

கிறிஸ்தவம் ஒரு மேன்மையான பிரதான ஆசாரியரைக் கொண்டுள்ளது என்ற உண்மையின் அடிப்படையில், கிறிஸ்தவத்தில் உள்ள *ஒவ்வொரு விஷயமும்* மேன்மையானதாக உள்ளது என்று, எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் உறுதிப்படுத்தினார். குறிப்பாக அவர், "ஒரு மேன்மையான நம்பிக்கை" (வசனம் 19) மற்றும் "ஒரு மேன்மையான உடன்படிக்கை" (வசனம் 22; காண்க 8:6) ஆகியவற்றைக் குறிப்பிட்டார். மேலும் அவர், கிறிஸ்தவம் மேன்மையான பலிகள் அமையப் பெற்றுள்ளது (7:27; காண்க 9:23) மற்றும் ஒரு மேன்மையான பரிசுத்த ஸ்தலத்தைக் கொண்டுள்ளது (8:2) என்றும் மறைமுகமாகக் குறிப்பிட்டார். இவ்வாறு எழுத்தாளர், கிறிஸ்தவமானது யூதத்துவத்தைக் காட்டிலும் எந்த வகையிலும் தாழ்ந்தது அல்ல என்பதைத் தமது யூத வாசகர்களுக்கு உறுதிப்படுத்தினார்.

**இது *இன்று* அர்த்தப்படுத்துவது என்ன**

இந்த சத்தியத்தை இன்றைய நாட்களில் நமக்கு இதை நடைமுறைப்படுத்த நம்மால் முடியுமா? முடியும் என்றே நான் நினைக்கிறேன். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், தமது வாசகர்கள் இருந்த இடத்தில் தமது நிருபத்தைத் தொடங்கினார்; நாமும் அவ்வாறே செய்ய வேண்டும். யூதத்துவத்தைக் காட்டிலும் கிறிஸ்தவம் தாழ்ந்தது என்று நம்மில் பெரும்பான்மை யானவர்களுக்குக் கூறப்பட்டிருப்பது இல்லை, ஆனால் இந்த உலகம் அளிப்பதைக் காட்டிலும் கிறிஸ்தவம் தாழ்ந்தது என்று நமக்குக் கூறப்*பட்டுள்ளது*. ஒருவர் தமது வாழ்வை சந்தோஷமாக அனுபவிக்க வேண்டும் என்றால், அல்லது பிரபலமாயிருக்க வேண்டும் என்றால் அல்லது வெற்றிநிறைந்தவராக இருக்க வேண்டும் என்றால், அவர் இயேசுவின் வழியைப் பின்பற்றுவதற்குப் பதிலாக உலகத்தின் வழியைப் பின்பற்ற வேண்டும் என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், இன்றைய நாட்களில் நமக்கு எழுதுவார் என்றால், *கிறிஸ்தவம் மேன்மையானது* - உலகம் அளிக்கும் எதைக்காட்டிலும் அது மேன்மையானது - என்பதை நாம் அறிய வேண்டும் என்று அவர் விரும்பி இருப்பார். எடுத்துக்காட்டாக, உலகம் தற்காலிக வெற்றியை, *தற்காலிக* சந்தோஷத்தை மற்றும் தற்காலிக மகிழ்ச்சியை அளிக்கிற வேளையில், கிறிஸ்தவம் *நித்திய* வெற்றியை, நித்திய சந்தோஷத்தை மற்றும் நித்திய மகிழ்ச்சியை அளிக்கிறது (காண்க 7:25; 11:24-26).

## போதகருக்குக் குறிப்புகள்

இது மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்காக வடிவமைக்கப்பட்ட பாடமாக உள்ளது. இதன் முதல் பாகத்தை, முன்பு படித்த சத்தியங்களை மறுகண்ணோட்டமிடப் பயன்படுத்துங்கள். இதன் இரண்டாம் பாகத்தை, முன்பு உரைக்கப்பட்ட பின்வரும் சத்தியத்தைச் செயல்விளக்கப்படுத்தப் பயன்படுத்துங்கள்: கிறிஸ்தவம் மேன்மையானது. நடைமுறைப்பயன்பாடு ஏற்படுத்தப்படும்போது, உங்கள் மாணவர்களிடத்தில், உலகத்தால் கூறப்பட்ட ("நீங்கள் கிறிஸ்தவராக இருந்தால் நீங்கள் எந்தக் கேளிக்கையும் கொண்டிருக்க இயலாது" என்பது போன்ற) பொய்களைப் பற்றிக் கேளுங்கள். உங்களிடத்தில் ஒரு கரும்பலகை அல்லது எழுதுவதற்கான பெரிய தாள் ஒன்று இருந்தால், இடதுபுறத்தின் ஓரத்தில் இவற்றை (பொய்கள்) எழுதுங்கள். பின்பு வலதுபுறத்தில், பின்வரும் சத்தியத்தை இடுங்கள்: கிறிஸ்தவத்தைப் பொறுத்த மட்டில் உண்மையிலேயே உண்மையாக இருப்பது என்ன? மாணவர்களின் மனங்களில், *எவரொருவரும்* எந்த இடத்திலும் அளிக்க முடியும் வேறு *எதைக் காட்டிலும்*, கிறிஸ்தவம் மேன்மையானது என்பதை எல்லாக் காலத்திற்கும் நிலைநாட்டும்படியாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

நான் வாழும் இடத்தில், கிறிஸ்தவர்களின் இருதயங்கள் மற்றும் வாழ்வு ஆகியவற்றிற்காக இந்த உலகம் பந்தயம் வைக்கிறது என்பதே முதன்மை விஷயமாக உள்ளது. நீங்கள் வாழும் இடத்தில், கிறிஸ்தவத்தைக் காட்டிலும் வேறொரு மார்க்கம் மேன்மையானது என்று உரிமை கோரிக்கொண்டு இருக்கலாம். விஷயம் அப்படி இருந்தால், இப்பாடத்தின் கடைசிப் பகுதியில், கிறிஸ்தவம் அந்த மார்க்கம் ஆகியவற்றிற்கு இடையில் ஒரு ஒப்பீட்டை உள்ளடக்கலாம்.